செ.வெ.எண்:112 நாள்: 02.02.2011

தமிழ் வளர்ச்சித் துறை

*செய்திக் குறிப்பு*

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணை நிறைவேற்றப்பட்டது

*நூலாசிரியர்களுக்கும், பதிப்பகங்களுக்கும் உயர்த்தி அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகைக்குரிய காசோலைகள் வழங்கப்பட்டன.*

திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழா 16.1.2011இல் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தில் 2009இல் வெளியிடப்பட்டுப் போட்டியில் கலந்து கொண்டவற்றில் பரிசுக்குரியவைகளாகத் தேர்வு செய்யப்பட்ட சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் பாராட்டுச் சான்றிதழுடன் பரிசுத் தொகை ரூ. 20,000/–க்கான காசோலையையும், அந் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகங்கள் ஒவ்வொன்றிற்கும் பாராட்டுச் சான்றிதழுடன் பரிசுத் தொகை ரூ. 5,000/– க்கான காசோலையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்விழாவில் வழங்கிச் சிறப்புரையாற்றினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய சிறப்புரையில், "இன்று முதல் (16.1.2011) சிறந்த நூலாசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இருபதாயிரம் ரூபாய் என்பதை மேலும் பத்தாயிரம் உயர்த்தி, முப்பதாயிரம் ரூபாயாக வழங்கப்படும்" எனவும் "பதிப்பகங்களுக்கு வழங்கப்பட்ட ஐந்தாயிரம் ரூபாய் என்பதை மேலும் ஐந்தாயிரம் உயர்த்திப் பத்தாயிரம் ரூபாயாக வழங்கப்படும்" எனவும் "உயர்த்தி அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகை நாளைக்கே அவர்களுக்குக் காசோலையாக வழங்கப்படும்" எனவும் அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பின்படி விழா நடைபெற்ற மறுநாளே (17–1–2011) அரசாணையும் வெளியிட்டார்கள்.

நூலாசிரியர்களுக்கும், பதிப்பகங்களுக்கும் உயர்த்தி வழங்கப்பட்ட காசோலைகள் 18–1–2011 அன்றே வழங்கப்பட்டன. சென்னையில் உள்ள நூலாசிரியர்களுக்கும், பதிப்பகங்களுக்கும் நேரில் சென்று காசோலைகள் வழங்கப்பட்டன. வெளியூரில் உள்ள நூலாசிரியர்களுக்கும், பதிப்பகங்களுக்கும் தூது அஞ்சல் மூலம் காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9